2018-ம் வருடம் ஏப்ரல் மாதம் 18-ம் தேதி புதன்கிழமை காலை 11.30மணிக்கு நடைபெற்ற கூட்ட நடவடிக்கையின் உண்மைநகல்:

முன்னிலை: திரு.எல்.குமார்.பி.இ.
தனி அலுவலர், ஆம்பூர் நகராட்சி.

----------

1. இந்நகராட்சியில் பணிப்புரியும் அகப்பணியாளர்கள் (ம) புறப்பணியாளர்கள் அலுவலக வேலை நிமித்தம் காரணமாக வெளியூர் சென்று வருவதற்கு அன்னார்களுக்கு பயணப்படி வழங்க 2018-2019ம் ஆண்டிற்கு செலவின தொகை ரு.2,00,000/-க்கு (ருபாய் இரண்டு லட்சம் மட்டும்) அங்கீகாரம் கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: மேற்படி பயணப்படி வழங்க ஆகும் செவினத்தொகையை வருவாய் நிதியிலிருந்து வழங்க அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.1393/2017/அ2

தீர்மான எண்.1: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

2. இந் நகராட்சியில் கல்வி நிதியின் கீழ் மேற்க்கொள்ள அங்கீகாரம் வழங்கப்பட்ட கீழ் குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு 28.03.2018-ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை (ரு.இலட்சத்தில்) | ஒப்பந்தாரர் பெயர் (திரு/திருமதி) | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | வார்டு எண்.4-ல் அங்காள பரமேஸ்வரி அம்மன் கோவில் குறுக்கு தெரு மற்றும் சந்திற்கு மழைநீர் வடிகால்வாயுடன் சிமெண்ட்தளம் அமைத்தல் மற்றும் காமராஜர் நகர் 3-வது தெருவிற்கு சிமெண்ட்தளம் அமைத்தல் | 9.90 | 1.எம்.தீனதயாளன்<br>2.வி.பாஸ்கர் | 0.05% மதிப்பீட்டைவிட குறைவு<br>1.25% மதிப்பீட்டைவிட அதிகம் |
| 2 | வார்டு எண்12-ல் மு.க.கொல்லை பகுதியில் மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் | 6.50 | 1.எம்.தீனதயாளன்<br>2.வி.பாஸ்கர் | 0.06% மதிப்பீட்டைவிட குறைவு<br>1.30% மதிப்பீட்டைவிட அதிகம் |
| 3 | வார்டு.எண்.36-ல் இந்திரா நகர் (வடக்கு) 4-வது தெருவிற்கு மழைநீர் வடிகால்வாயுடன் சிமெண்ட்தளம் அமைத்தல | 7.75 | 1.எம்.தீனதயாளன்<br>2.வி.பாஸ்கர் | 0.06% மதிப்பீட்டைவிட குறைவு<br>1.10% மதிப்பீட்டைவிட அதிகம் |

அலுவலகக்குறிப்பு:- மேற்க்குறிப்பிட்டுள பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவாக கொடுத்துள்ள திரு.எம்.தீனதயாளன் ஒப்பந்ததாரின் ஒப்பந்தப்புள்ளிகளை அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.243/2018/இ1

தீர்மான எண்.2: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

3. இந் நகராட்சிக்கு 2015-16-ஆம் ஆண்டு தேசிய நகர்ப்புற சுகாதார இயக்கம் (NUHM) திட்டத்தின் கீழ், நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுதல் பணியினை மேற்க்கொள்ள மாநில சுகாதார முகமை இயக்குனர், சென்னை.6 அவர்களின் செயல்முறை ந.க.எண்.1869/NUHM/SHS/2015, நாள் 8.10.2015ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின் பேரில், கீழ் குறிப்பிட்டுள்ள பணிக்கு 04.04.2018ல் இரு உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ள ஒப்பந்ததாரர்களின் தொழில் நுட்ப தகுதியினை ஆராய்ந்து தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களின் விலை விவர ஒப்பந்தப் புள்ளிகளை (PRICE BID) 12.04.2018ம் தேதி அன்று திறப்பு செய்யப்பட்டது. தகுதி பெற்ற ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் கீழ்வருமாறு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

| வ. எண் | பணியின் விவரம் | ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரர்கள் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சி எல்லைக்குட்பட்ட (புதிய சர்வே) வார்டு எண்.ஏ, பிளாக்.எண்.20,நகரளவு எண்.33/56 (பழைய சர்வே) வார்டு எண்.ஏ, பிளாக்.எண்.3, நகரளவு எண்.33/7பி2-ல் புதியதாக நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் (தரை தளம் மற்றும் முதல் தளம்) கட்டுதல் | 48.00 | 1.கே.எஸ்.என்.கன்ஸ்டிரக்சன்ஸ்<br><br>2.ஆர்.சுரேஷ்மணி | 4.96% மதிப்பீட்டை விட அதிகம்<br><br>5.33% மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டு தொகையை விட கூடுதலாக உள்ளதால், குறைந்த விலைவிகிதம் (NEGOTIATION) வழங்குமாறு கூடுதலில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர் கே.எஸ்.என்.கன்ஸ்டிரக்சன்ஸ் அவர்களுக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.514/2015/இ1, நாள்:13.04.2018 மூலம் தெரிவிக்கப்பட்டதில், தற்போது கட்டுமான பொருட்களின் விலை அதிகமாக உள்ளதாலும், வேலையினை செய்யும் பணியாட்களின் கூலித் தொகை அதிகமாக உள்ளதாலும், ஒப்பந்த விலை விகிதத்தை குறைத்து வழங்க இயலாதநிலை உள்ளது என சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர் தனது 18.04.2018ம் தேதிய கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளதை பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அ. 2015-16-ஆம் ஆண்டு தேசிய நகர்ப்புற சுகாதார இயக்கம் (NUHM) திட்டத்தின் கீழ், நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுதல் பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும் மதிப்பீட்டிற்கு கூடுதலாக உள்ளது.மேற்படி பணி திட்டப் பணியாக இருப்பதாலும், அரசு நிர்ணயித்துள்ள கால கெடுவிற்குள் பணியினை முடிக்க வேண்டி இருப்பதாலும், அவசர அவசியத்தை கருத்தில் கொண்டும், நகராட்சி பொறியியல் நடைமுறை நூல் பக்கம்.9ல் 2.7.2ல் தெரிவித்துள்ள்வாறு, மதிப்பீட்டிற்கு 5 சதவீதம் வரை ஒப்பந்தப்புள்ளி கூடுதலாக இருந்தாலும், ஒப்புதல் வழங்கலாம் என குறிப்பிட்டுள்ள காரணத்தை கருத்தில் கொண்டு, மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு கே.எஸ்.என்.கன்ஸ்டிக்சன்ஸ் ஒப்பந்தாரர் மதிப்பீட்டை விட கூடுதலில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளதை அங்கீகரிக்கலாம்.
ஆ. மேற்படி திட்டத்தின் கீழ், ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை போக கூடுதலாக ஏற்படும் செலவினத் தொகையை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.
ந.க.எண்.514/2015/இ1
தீர்மான எண்.3: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

4 இந் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு.எண்.36-ல் உள்ள சாமியார்மடம் 2-வது தெருவில் அமைக்கப்பட்டுள்ள மழைநீர் வடிகால்வாயைவிட அப்பகுதி குடியிருப்போர் மண்குவியலை கொட்டி சாலையினை உயர்த்திவிட்ட படியால் மேற்படி மழைநீர் வடிகால்வாயில் மண்துகள்கள் விழுந்து அடைப்பு ஏற்பட்டு விடுவதால் மழைநீர் செல்லாமல் தேங்கி நின்று விடுகிறது.எனவே, மேற்படி மழைநீர் வடிகால்வாயின் இருபக்க சுவற்றினை உயர்த்தி ஆர்.சி.சி.சிலாப் கொண்டு மூடவும், அதற்காகும் மதிப்பீடு தொகை ரூ.5.80 இலட்சத்திற்கும் (ரூபாய்.ஐந்துலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) அங்கீகாரம் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-அங்கீகாரம் வழங்கலாம். மேற்குறிப்பிட்டுள்ள பணியை வருவாய் நிதியின் கீழ் மேற்க்கொள்ள அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.314/2018/இ1

தீர்மான எண்.4: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

5. இந் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு.எண்.23-ல் வாணக்கார கொல்லை 2-வது தெரு மற்றும் தேசிய நெடுஞ்காலை சந்திப்பு பகுதியில் வாணக்கார கொல்லை 2-வது தெருவின் தெற்கு பகுதியில் மழைநீர் வடிகால்வாய் இல்லாமையால் மழைகாலங்களில் மழைநீர் தேங்கி விடுவதால் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் பெரும் இடையூறாக உள்ளதால் அப் பகுதியில் மழைநீர் வடிகால்வாய் கட்டவும், அதற்காகும் மதிப்பீடு தொகை ரூ.1.50 இலட்சத்திற்கும் (ரூபாய்.ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) அங்கீகாரம் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-அங்கீகாரம் வழங்கலாம். மேற்குறிப்பிட்டுள்ள பணியை வருவாய் நிதியின் கீழ் மேற்க்கொள்ள அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.330/2018/இ1

தீர்மான எண்.5: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

6. இந்நகராட்சியின் அலுவலக ஈப்பு வாகன எண் TN83 Y9506 –ஐ ஆயில் சர்வீஸ் மற்றும் இதர பழுதுகளை மகேந்திரா நிறுவன அங்கிகாரம் பெற்ற டீலர் ஜெயின் கார்ஸ் நிறுவனத்தின் மூலம் சரி செய்யப்பட்ட வகையில் ஏற்பட்ட செலவினத் தொகை ரூ 27,774/-க்கு அங்கிகாரம் கோரப்படுகின்றது.

**அலுவலக குறிப்பு:**

அலுவலக பணியின் அவசர அவசியத்தை கருதி மேற்கண்ட பணியினை மேற்கொணடமைக்கும், பணிக்கான செலவினத் தொகை வழங்கிமைக்கும் மன்றம் அங்கிகாரம் வழங்கலாம்.

(ந.க. எண்: 1217/2018/இ2)

தீர்மான எண்.6: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

7. இந் நகராட்சிக்கு சொந்தமான ஆழ்துளை கிணறுகளில் உள்ள மினிபவர் பம்ப் நீரேற்று நிலையங்களில் உள்ள மற்றும் தரைமட்ட நீர்த்தேக்க தொட்டிகளில் உள்ள மின்மோட்டார் திறந்தவெளி கிணற்றில் உள்ள மின்மோட்டார்கள், ஆழ்துளை கிணறுகளில் உள்ள பவர் பம்ப் மோட்டார்கள், பொது கழிப்பிட கிணறுகளில் உள்ள மின்மோட்டார்கள், நகராட்சி பள்ளிகளில் உள்ள மின்மோட்டார்கள் என மொத்தம் உள்ள 507 மின்மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்யும் பணிக்கு, 17.04.2018ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் விவரம் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

| ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|
| 1. எஸ்.அருணாசலம் | 0.04% மதிப்பீட்டை விட குறைவு. |
| 2. ஏ.வி.நாகராஜன் | 1.27% மதிப்பீட்டை விட அதிகம். |

அலுவலகக்குறிப்பு: மேற்கண்ட பணிக்கு குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எஸ்.அருணாசலம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரிக்கலாம்.
ந.க.எண். 347/2018/இ2
தீர்மான எண்.7: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

8. இந் நகராட்சியில் குடிநீர் நிதியின் கீழ், கீழ் குறிப்பிட்டுள்ள பணிகளை மேற்கொள்ளவும் அதற்காகும் மதிப்பீடு தொகைகளுக்கும் அங்கீகாரம் கோரப்படுகின்றது.

| வ. எண். | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை (ருபாய் லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையங்களான சாரங்கல், நரியம்பட்டு, ஆணைமடுகு (மாங்காய் தோப்பு) வண்ணாந்துறை, நதிசீலாபுரம் மற்றும் சாணிக்கணவாய் மேடு ஆகிய நிலையங்களில் உள்ள நீர் உறிஞ்சி கிணறு திறந்த வெளி கிணறு மற்றும் ஆழ்துளை கிணறு, மேலும் நகராட்சி எல்லைக்குட்பட்ட நகராட்சிக்கு சொந்தமான திறந்தவெளி கிணறுகளில் உள்ள மின்மோட்டார் மற்றும் குழாய் வால்வுகளை இயக்குதல். ( மே.2018 முதல் டிசம்பர்.2018 வரை). | 9.96 |
| 2 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 9 எண்ணிக்கை மேல்நிலை மற்றும் கீழ்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு தலைமை நீர்ரேற்றும் நிலையங்கள் மற்றும் வேலூர் கூட்டு குடிநீர் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக இந்நகராட்சி பகுதிக்கு தினசரி குடிநீர் விநியோகம் மேற்கொள்ள நீர்த்தேக்க தொட்டிகளில் நீரேற்றுவதை விநியோகம் செய்ய தேவைப்படும் குடிநீர் குழாய் திருகுநர் (வால்வு ஆப்ரேட்டர்) வால்வுகளை இயக்குதல். (மே.2018 முதல் டிசம்பர்.2018 வரை). | 9.96 |
| 3 | கோடைக்காலத்தில் பொது மக்கள் அதிகம் கூடும் 10 இடங்களில் 10 எண்ணிக்கை சின்டெக்ஸ் டேங்க் (HDPE) மற்றும் இதர உபகரணங்கள் அமைத்து குடிநீர் வசதி செய்தல் | 0.50 |

**அலுவலகக்குறிப்பு:** 1. அங்கீகாரம் வழங்கலாம்.

2. மேற்கண்ட பணிகளுக்கான செலவினத்தை குடிநீர் நிதியின் கீழ் மேற்க்கொள்ளவும், தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோர நடவடிக்கை மேற்க்கொண்டமைக்கு அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.459/2018/இ2

தீர்மான எண்.8: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

9. இந்நகராட்சி பகுதியில் கோடைகாலத்தில் ஏற்படும் வெப்பத் தாக்கத்திலிருந்து பொதுமக்கள் தற்காத்துக்கொள்ள செய்ய வேண்டிய (ம) செய்யக்கூடாத செயல்கள் குறித்த விபரத்தினை விளம்பரப் படுத்தும் வகையில் டிஜிட்டல் பேனர்கள் (VINYL BOARD) 8"X 5" அளவில் இரும்பு கம்பங்களுடன் அமைக்கும் பணிக்கு 06.04.2018-ம் தேதி விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகள் விவரம் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் (ம) முகவரி | விலை புள்ளி தொகை (1 எண்ணிக்கை) |
|---|---|---|
| 1 | எஸ். சரவணன்<br>சரவணன் டிஜிட்டல் பிரிண்டர்ஸ்,ஆம்பூர். | 4800/- |
| 2. | உமா ஆப்செட் & கிராபிக்ஸ், ஆம்பூர். | 5,000/ |
| 3. | ஸ்ரீ சாரதா பிரிண்டர்ஸ், ஆம்பூர். | 5,200/- |

**அலுவலகக் குறிப்பு :-**அ. மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப் புள்ளியினை வழங்கியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம். ஆ.மேற்கண்ட பணிகளின் அவசர அவசியத்தை கருதி, தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண். 214/2018/இ2

தீர்மான எண்.9: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

10. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மேடான மற்றும் பைப்லைன் இல்லாத பகுதிகளுக்கு 6000லிட்டர் கொள்ளளவு கொண்ட தனியார் லாரி மற்றும் டிராக்டர்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு தீர்மான எண் 297 நாள்: 02.02.2018-ல் தொகை ரு.5.00லட்சத்திற்கு அங்கீகாரம் பெற்று பணிகள் மேற்கெள்ளப்பட்டு வருகிறது. மேற்படி குடிநீர் விநியோக பணியின் அவசியத்தை கருதி மேற்கண்ட பணியினை தொடர்ந்து மே-2018ம் மாதம் வரை மேற்கெள்ளவும் ஆகும் உத்தேச செலவினத் தொகை ரு.6.00 லட்சத்திற்கு அங்கீகாரம் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. குடிநீர் விநியோக பணியின் அவசியத்தை கருதி மேற்கண்ட பணிக்கு ஏற்பட்ட கூடுதல் செலவின தொகைக்கு அங்கீகாரம் வழங்கலாம்.
2. மேற்கண்ட பணிக்காகும் செலவினத்தை குடிநீர்நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.42/2018/இ2

தீர்மான எண்.10: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

ஒம்/- இல.குமார்,
தனி அலுவலர்,
ஆம்பூர் நகராட்சி

/உண்மைநகல்/

தனி அலுவலர்,
ஆம்பூர் நகராட்சி